| | கேள்வி | பதில் | குறிப்பு |
|---|---|---|---|
| **A** | **இறைத்தூதர்கள் அல்லாஹ் ஒருவனுக்குத் தான் அடிமையாக இருக்க வேண்டும் என்று பிரகடனப்படுத்தும் குர்ஆன் வசனம் எது?** | **எந்த மனிதருக்கும் வேதத்தையும், ஞானத்தையும், நபித்துவத்தையும் அல்லாஹ் வழங்கிய பின்னர் "அல்லாஹ்வை விடுத்து எனக்கு அடியார்களாகி விடுங்கள்" என்று மக்களிடம் கூறுவது அவருக்குத் தகாது. மாறாக, "நீங்கள் வேதத்தை கற்றுக் கொடுப்போராகவும், கற்போராகவும் இருப்பதால் இறைவனைச் சார்ந்தோராக ஆகிவிடுங்கள்" (என்றே கூறுவார்.)** | **மனிதர்கள் இறைவனைத் தவிர வேறு யாருக்கும் அடிமைகளாக இருக்க முடியாது. மக்கள் தனக்கு அடிமையாக இருக்க வேண்டும் எனக் கூற எந்த இறைத் தூதருக்கும் தகுதியில்லை என்று குர்ஆன் தெளிவாகக் கூறுகின்றது.** |
| **B** | **அல்லாஹ் மறுமையில் இந்த குற்றம் செய்தவனை கோபமுற்ற நிலையில் சந்திப்பான். அது என்ன குற்றம்? இது போன்ற குற்றத்தை கண்டிக்கும் விதமாக அருளப்பட்ட குர்ஆன் வசனம் எது?** | **அல்லாஹ்விடம் செய்த உடன்படிக்கையையும், தமது சத்தியங்களையும் யார் அற்ப விலைக்கு விற்கிறார்களோ அவர்களுக்கு மறுமையில் எந்த பாக்கியமும் இல்லை. மறுமை நாளில் அவர்களிடம் அல்லாஹ் பேச மாட்டான்; அவர்களைப் பார்க்க மாட்டான். மேலும் அவர்களைத் தூய்மைப்படுத்தவும் மாட்டான். அவர்களுக்குத் துன்புறுத்தும் வேதனை உள்ளது. 3:77** | **அல்லாஹ்வின் மீது பொய் சத்தியம் செய்தல்**<br>**புஹாரி-2088, 2357, 2358, 2416,2417, 2515, 2516, 2666, 2667** |